நான் இன்றைக்கு மற்ற விவகாரங்களைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அதை நம்முடைய அமைச்சரவர்களும், மற்றவர்களும் பார்த்துக்கொள்வார்கள். நான் கேட்பதெல்லாம், எதிர்க்கட்சித் தலைவர்கள்—இங்கே இருப்பவர்களும் சரி, இல்லாதவர்களும் சரி—நம்பிக்கைக் கொள்ளும் விதத்தில் இந்த அமைச்சரவை நடைபெறுகிறதா இல்லையா ? இந்த ஆட்சி எந்த வகையிலே குறை செய்திருக்கிறது? என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நீங்கள் நடந்துகொள்ளும் முறை இந்த மன்றத்தை மதிக்கவில்லை ; இந்த மன்றத்தின் உறுப்பினர்களை மதிக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்த அமைச்சரவை மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டுமென்றால், உங்களுடைய குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்திலே நேரடியாகத் தாக்கல் செய்திருக்க வேண்டும். இங்கே அதைப்பற்றி விவாதித்திருக்க வேண்டும். இந்தச் சபையை நீங்கள் மதிக்கிறீர்கள் என்றால், குற்றப் பட்டியலை இந்தச் சபையிலேயே வைத்திருக்கலாம். அதை நீங்கள் செய்யவில்லை. இந்த சபையை நீங்கள் மதிக்காமல், இங்கே இருக்கின்ற ஆளுநர் அவர்களை நீங்கள் மதிக்காமல், என்ன செய்திருக்கிறீர்கள்? இங்கே இருந்து டெல்லிக்குப் போய் ஜனாதிபதியிடத்திலே குற்றப்பட்டியலைக் கொடுத்திருக்கிறீர்கள். ஜனாதிபதி அதை முறைப்படி பிரதமருக்கு அனுப்பி, பிரதமர் அதை இங்குள்ள முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அவையை இன்னும் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கலாமா ? (சில குரல்கள் : திங்கட்கிழமை அன்று விவாதம் தொடரலாம்)

5 அறிவிப்பு.

பேரவையின் அலுவல் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9—12—1972-ம் நாள் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவை நடப்புக் கூட்டத் தொடரின் திருத்திய நிகழ்ச்சி விவரம் :—

11—12—1972 (திங்கட்கிழமை).	4—12—1972-ம் நாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் (கடைசி நாள்).

பேரவைத் துணைத்தலைவர் [1972 டிசம்பர் 9

12—12—1972 (செவ்வாய்க்கிழமை). 13—12—1972 (புதன்கிழமை).	அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும்.
14—12—1972 (வியாழக்கிழமை).	(1) 1972-73-ம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.
15—12—1972 (வெள்ளிக்கிழமை).	(1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும் நிறைவேற்றலும். (2) அரசினர் சட்ட முன்வடிவுகள் எவையேனும் இருப்பின் அவை.

தேவையிருப்பின், பேரவை 16—12—1972-ம் நாளன்றும் கூடும்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 11—12—1972 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். அன்று அமைச்சரவை மீது நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

6 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்—

A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. Ms. No. 1832, Rural Development and Local Administration, dated the 2nd September 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd September 1972. [Laid on the Table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

40. Notification issued with G.O. Ms. No. 1624, Rural Development and Local Administration, dated the 2nd August 1972, in regard to extension of terms of office of the members of the Tamil Nadu Khad